# திரும்பி பார்கிறேன்…!! (LOOKING BACK..!!)



திரும்பி பார்கிறேன்…!!
கடந்து வந்த வாழ்கையை
மேடு பள்ளங்களை, வெற்றி தோல்விகளை
சுக துக்கங்களை, கோபதாபங்களை
சந்திப்புகளை, பிரிவுகளை…
குழந்தை தனத்துடன் கூடிய அசட்டுத்தனங்களை
தற்பெருமைகளை, கையாலாகாதனங்களை
நண்பராய் இருந்த பகைவர்களை, பகைவராய் இருந்த நண்பர்களை…
இவற்றின் மூலம் கற்ற பாடங்களை..
கடந்து வந்த பாதைகளில் தெரியும் காலடி சுவடுகளில் தான் எத்தனை
எத்தனை வண்ணங்கள், கோணங்கள்…
எந்த மழையாலும் புயலாலும் அழிக்க முடியாத சுவடுகள்..
ஒவ்வொரு முறை பின்னோக்கி செல்லும் பொழுதும்,
அந்த நினைவுகளையே விதைகளாக்கி
அதனால் ஏற்படும் கண்ணீரை கூட தனக்கு சாதகமாகி
மீண்டும் மீண்டும் ஜனிக்கும் விந்தை…
எப்பொழுதோ ஏற்பட்ட ரணங்களையும் அதன் வலிகளையும்,
இப்பொழுது அசை போடும் பொழுது
மிஞ்சுவது என்னவோ ஒரு சிறிய புன்னகையும், அதனுடன் சேர்ந்தே வந்து
விடும் இரு கண்ணிற் துளிகளும் தான்…
இதோ இப்பொழுது என் முன்னே…

மேடு பள்ளங்கள், வெற்றி தோல்விகள், சுக துக்கங்கள்...
வெற்றியை மட்டுமே வேண்டி எடுத்து வைக்கிறேன் எனது காலடி...
மீண்டும் திரும்பி பார்க்கும் பொழுது மிஞ்சபோவது என்னவோ
ஒரு மெல்லிய புன்னகையும், இரு கண்ணிற் துளிகளும் தான்
என்பதை நன்றாக அறிந்தும்...
எத்தனை முறை அழிந்தாலும் மீண்டும் மீண்டும் சாம்பலில் இருந்து
பிரசவிக்கும் பீனிக்ஸ் பறவை போல...
மீண்டும் மீண்டும் புதிதாய் ஜனிக்கிறேன்...
இந்த நினைவுகளில் இருந்து...

**GAYATHRI RAMESH**
**GRD IYERS**

GRD IYERS